**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-09042025-8888

Volume: 9

Issue: 4

Month: April

Year: 2025

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 24.01.2025

Accepted: 15.03.2025

Published: 01.04.2025

Citation:
Murugesapandian, N. "Film Music Songs in Tamils Life:Featuring Vairamuthu"s Lyrics." *Shanlax International Journal of Tamil Research*, vol. 9, no. 4, 2025, pp. 1–12.

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i4.8888

*Corresponding Author:
murugesapandian2011@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Film Music Songs in Tamils life: Featuring Vairamuthu's Lyrics

**N. Murugesapandian**

*http://orcid.org/0000-0002-1831-7730*

**Abstract**

*How did Vairamuthu"s achievements as a poet in composing Tamil film lyrics come about? Where did Vairamuthu"s poetic words originate? The crisis in the Tamil film industry during the 1980s created a lyricist named Vairamuthu out of necessity. At the same time, Vairamuthu, as an individual, transformed film music into a masterpiece. The changes that have occurred from Sangam Age to the present time in songwriting in Tamil literature are reviewed using Vairamuthu"s film lyrics.*

***Keywords:*** *Tamil film, Film Soundtracks, Vairamuthu, Songs, Criticism, Visual media. Music.*

**References**

1. Vairamuthu. A Thousand Songs. Chennai: Surya Literature, 2018 (Fifth Edition).

# தமிழர் வாழ்க்கையில் திரையிசைப் பாடல்கள்: வைரமுத்துவின் பாடல் வரிகளை முன்வைத்து

*ந. முருகேசபாண்டியன்*

***ஆய்வுச் சுருக்கம்***

*வைரமுத்து கவிஞராகத் தமிழ்த் திரைப்படப் பாடல் ஆக்கத்தில் செய்த சாதனைகள் எப்படி நிகழ்ந்தன? வைரமுத்துவின் கவித்துவம் தோய்ந்த சொற்கள் எங்கிருந்து உருவாகின? என்பதுகள் காலகட்டத்தில் நிலவிய நெருக்கடிக்குள்ளாகியிருந்த தமிழ்த் திரைப்படச் சூழல்தான் தேவையின் காரணமாக வைரமுத்து என்ற பாடலாசிரியரை உருவாக்கியது. அதேவேளையில் வைரமுத்து தனிமனிதராகத் திரையிசைப் பாடலாக்கத்தைக் காத்திரமாக மாற்றியமைத்ததும் நடைபெற்றது. வைரமுத்துவின் திரைப்படப் பாடல் வரிகளை முன்வைத்துத் தமிழிலக்கியப் பரப்பில் பாடல் புனைவில் காலந்தோறும் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ஆய்விற்குறப்படுத்தப்பட்டுள்ளன.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழ்த் திரைப்படம், திரையிசைப் பாடல்கள், வைரமுத்து, பாடல்கள், திறனாய்வு. காட்சி ஊடகம். இசை.*

**அகவன்மகளேஅகவன்மகளே**
**மனவுக்கோப்பன்னநன்னெடுங்கூந்தல்**
**அகவன்மகளேபாடுகபாட்டே**
**இன்னும்பாடுகபாட்டேஅவர்**
**நன்னெடுங்குன்றம்பாடியபாட்டே.**
**- ஔவையார்**

இசை, பூமியில் மனிதர்கள் மொழியைக் கண்டறிந்து பேசுவதற்கு முன்னர் தோன்றிய உடல் மொழியுடன் நெருங்கிய தொடர்புடையது. இயற்கை வெளியில் காற்றில் மிதந்திடும் இசை, கேட்பவரின் உள்ளத்தில் நுண்ணிய தாக்கத்துடன் மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. ஒவ்வொரு சொல்லுக்கும் சொற்றொடருக்கும் பின்னர் ஏதோவொரு சந்தம் பொதிந்திருப்பதால் தான் கவிதை வரிகளில் இசையொழுங்கு வெளிப்படுகிறது. பண்டைக்காலத்தில் கருத்தினை முன்வைத்துப் பாணர் இயற்றிய பாடல் வரிகள் மீண்டும் மீண்டும் இசையில் தோய்ந்துஒலித்தபோது, அவை கேட்பவரின் மனதில் அழுத்தமாகப் பதிவாகின. தமிழ் மொழிக்கும் இசைக்குமான நெருங்கிய தொடர்பு, சங்க காலம் முதலாக இன்று வரையிலும் தொடர்கின்றது. இரண்டாயிரமாண்டு வரலாற்றுத் தொன்மையான தமிழர் வாழ்க்கையில் இசையுடன் பாடலைப் பாடுகின்ற பாணர் மரபில் வாய்மொழியாகப் பாடிய பாடல்கள், காலங்கடந்து இன்றளவும் நிலைத்திருக்கின்றன. தொல்காப்பியர் இசை, இசைக்கலைஞர்கள், இசைக்கருவிகள் பற்றிப் புறத்திணையியலில் குறிப்பிட்டிருக்கிறார். சங்க நூல்களில் இசை இலக்கியமாகக் கருதப்படும் பரிபாடலில் இடம் பெற்றுள்ள பாடல்கள் பெரிதும் இசையுடன் இசைக்கப்பட்டவை. சங்க இலக்கியப் படைப்புகளில் குறிப்பிடப்படும் ஆம்பல் பண், பாலைப்பண், குறிஞ்சிப் பண், முல்லைப் பண், விளரிப் பண், காஞ்சிப் பண் போன்றவை இசைக்கு நெருக்கமானவை. கபிலர் குறிஞ்சிப் பாட்டில் இசையுடன் தொடர்புடைய பல்வேறு தகவல்களைப் பதிவாக்கியுள்ளார். இயற்கையிலிருந்து இசையைக் கேட்கின்ற மரபினுக்கு முன்னோடியாகக் குறிஞ்சிப் பாடல்

விளங்குகிறது. தமிழில் பாட்டு என்ற சொல் இசைப் பாவைக் குறித்துப் பின்னர் இசைப் பாடல் என்று மாறியது. சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ள கானல் வரி, ஆய்ச்சியர் குரவை போன்ற பாடல் வரிகள் முழுக்க இசையை மையமிட்டுள்ளன. யாப்பின் அடிப்படையில் எழுதப்பட்ட வெண்பா, விருத்தப் பா போன்ற பா வகைகளும் புலவரின் மனதில் தோய்ந்திருக்கும் இசைப் பின்புலத்தினால்தான் ஆயிரக்கணக்கான பாடல்களாக எழுதப்பட்டன. இறைவனைப் போற்றி வழிபடுவதற்காக எழுதப்பட்ட நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், தேவாரம் போன்ற இறைமைப் பனுவல்களும் இசைக்கு முதன்மையளித்து இறையடியார்கள் பாடிய பாடல்கள் உள்ளத்தை உருக்குகின்றன. செவ்வியல் இசைப் பின்புலத்தில் வளர்ச்சியடைந்த இசைத்தமிழ் மரபும் தமிழ்ப் பாடல் வரிகளும் இடைக்காலத்தில் புறக்கணிப்பிற்குள்ளாயின. கர்நாடக இசை தெலுங்குக் கீர்த்தனைகளுடன் புனிதமாகக் கருதப்பட்டுத் தமிழ்நாட்டு இசை மேடைகளில் பாடப்படுவது முக்கியமாகக் கருதப்பட்டது. கர்நாடக இசைக் கச்சேரிகளில் தமிழ் பாடல்கள் இரண்டாம் நிலைக்கு ஒதுக்கப்பட்டன. கர்நாடக இசையை இறைவனுடன் தொடர்புபடுத்திப் புனிதமானது என்ற குரலுக்குப் பின்னர் சநாதன அரசியல் பொதிந்துள்ளது. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ்ப் பாடல்களுக்கு முக்கியத்துவம் தந்து தமிழிசையை மீட்டுருவாக்கிட நடைபெற்ற தமிழிசை அரசியல், தனிக்கதை.

பண்டைத் தமிழர் வாழ்க்கையில் ஊர் ஊராகச் சுற்றியலைந்து இசையுடன் பாடல்களைப் பாடிய பாணர் மரபு பெற்றிருந்த இடம், சங்க காலத்தின் பிற்பகுதியிலே சிதலமடைந்து விட்டது. என்றாலும் எனக்குத் தெரிந்த அளவில் வயலில் அறுவடை நடைபெற்றுக் களத்தில் நெல் அரிகளைக் குவித்திருக்கும்போது புலவர் மரபினருக்கு புலவர் அரி வழங்கும் வழக்கம் அறுபதுகளில்கூட நிலவியது. ஓலைச்சுவடிகள் இருந்தாலும் மனனம்மூலம் பல நூல்களை நினைவில் வைத்திருக்கும் புலவர்களுக்குக் கிராமப்புறங்களில் மரியாதை இருந்தது. ஒரு சொல் வெல்லும் ஒரு சொல் கொல்லும் என்று நம்பிய கிராமத்தினர், புலவர் ஏதாவது பாடினால் அது நிச்சயம் பலிக்கும் என்ற நம்பினர். தமிழ்ப் பாடல்கள் என்றாலே வாய் மொழியாகக் காலந்தோறும் பாடப்பட்ட பாடல்கள்தான். ஒருவிதமான சந்தத்துடன் பாடப்பட்ட பாடல்கள் இசையினால் பலரின் நினைவில் பதிந்து தலைமுறைகள் தோறும் தொடர்ந்து பாடப்படுகின்றன.

பார்ப்பனர்கள் உள்ளிட்ட உயர்சாதியினர் கர்நாடக இசையைத் தங்களுடைய அடையாளமாகவும் பெருமையாகவும் கருதியபோது, உழவுப் பாடல்கள், ஒப்பாரி, தாலாட்டு போன்ற பாடல்கள்மூலம் வாய்வழியாகப் பாமரர்கள் தங்களுக்கான இசைப் பாடல்களைப் பாடினர்; கொண்டாடினர். பெரும்பாலானோர் எழுத்தறிவு இல்லாவிடிலும் வாய்மொழி மரபில் பாடப்பெற்ற பாடல்களின் வரிகளை நினைவின் வழியாக அடுத்தத் தலைமுறைக்குக் கடத்தினர். குழந்தைகள் விளையாடும்போது பாடல்களைப் பாடி மகிழ்ந்தனர். நாட்டுப்புற ஆட்டக் கலைகள், தெருக்கூத்து போன்றன நிகழ்த்தப்படும் போதும் சங்கரதாஸ் சுவாமிகளின் இசை நாடகங்களிலும் பாடப்பட்ட இசைப் பாடல்கள் வெகுஜனரீதியில் பிரபலமாக விளங்கின. குறிப்பிட்ட வட்டாரத்திற்குள் செவ்வியல் இசை என்று கர்நாடக இசை போற்றப்பட்டபோது பெரும்பான்மையினர் வாய்மொழி மரபில் தமிழ்ப் பாடல்களைப் பாடினர். 1930களில் அறிமுகமான தமிழ்த் திரைப்படங்களில் இடம் பெற்ற திரையிசைப்பாடல்கள் தமிழ்நாடு முழுக்கப்பரவின. நாளடைவில் இசைத்

தட்டுகள் ஒலித்தபோது தமிழ்த் திரைப்படப் பாடல்கள் இசையுடன் தமிழர் மனதில் ஊடுருவின. சுருங்கக்கூறின், தமிழர் இசைப் பாடல்கள் காலந்தோறும் பல்வேறு மாற்றங்களை எதிர்கொண்டு இன்று திரையிசைப் பாடல்களாகியுள்ளன. கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை, மேற்கத்திய இசை போன்ற பல்வேறு இசை மரபுகளை உள்வாங்கிக்கொண்டு, தமிழ்த் திரையிசைப் பாடல்கள், சமகாலத் தமிழரின் அடையாளமாகியுள்ளன. பொதுவாகத்திரையிசைப் பாடல் என்றால் கேவலமானது என்ற மேல்தட்டுக் கருத்தியல் பொருட்படுத்தக் கூடியதல்ல; ஒருவகையில் மடத்தனமானது. இசையைக் குறுகிய வட்டத்திற்குள் சுருக்கி, இசையை ரசிக்கும் மனப்பான்மை தங்களுக்கு மட்டும் சொந்தம் என்று கொண்டாடுகிறவர்களும்கூட இன்று திரையிசையை இசைக்கவும் பாடல்களைப் பாடிடவும் முயலுகின்றனர் என்பதுதான் யதார்த்தம். திரையிசைப் பாடல்கள் மக்களிடம் அடைந்திருக்கிற புகழும் மதிப்பும் காரணமாகப் புலமையாளர்கள் பாடல்களை எழுதிப் பொருள் ஈட்டுகின்றனர்.

திரைப்படத்தில் திரைக்கதையில் இடம் பெற்றுள்ள காட்சிகளைக் காட்சிப்படுத்துகிற திரைமொழியில் சம்பவங்களுக்கு முக்கியத்துவம் தரும் வகையில் பாடல்கள் இடம் பெறுகின்றன. காலங்காலமாக நிகழ்த்தப்பட்ட நாடகங்களின் தொடர்ச்சியினால் தான் புராண, இதிகாசக் கதையம்சம் கொண்ட தமிழ்த் திரைப்படங்களில் ஐம்பது பாடல்கள்கூட இடம் பெற்றன. மக்கள் திரையிசைப் பாடல்களை விருப்பத்துடன் கேட்டு உற்சாகமடைந்தனர். இசையமைப்பாளர், திரைப்படத்தில் இடம் பெறும் சம்பவத்தை முன்னிறுத்திப் போடுகின்ற மெட்டுக்கு ஏற்றவாறு கவிஞர் பாடல் வரிகளைப் புனைவது ஒருவகையில் சவால்தான். பாடல் வரிகள், திரைக்காட்சியை வெளிப்படுத்திடும் வகையில் செறிவுடன் எழுதப்படுவதுடன் இசையமைப்பாளரின் இசைக்கோவைக்கு மெருகூட்டிடும் வகையில் அமைந்திடுவது அவசியம்.

இதுவரை தமிழில் பல்லாயிரக்கணக்கான திரையிசைப் பாடல்கள் வெளியாகியுள்ளன. இசையினால் திரைப்படப் பாடல் வரிகள் பிரபலமடைந்து பரவலாகக் கவனம் பெறுகின்றன. எனினும் ஒவ்வொரு காலகட்டத்திலும் சில பாடல்கள்தான் காலங்கடந்து நிலைத்திருக்கின்றன. பொதுவாக இசையுடன் ஒலிக்கிற பாடல்கள், திரைப்படத்தின் கதையாடலுடன் இசைந்திடும் போது பார்வையாளர்களுக்கு உற்சாகம் பீறிடுகிறது. காதல், சோகம், இழப்பு, கொண்டாட்டம், மகிழ்ச்சி, பிரிவு, வீரம் போன்ற அடிப்படையான உணர்ச்சிகளை முன்வைத்து எழுதப்படுகின்ற பாடல் வரிகள், திரையிசைப் பாடல்களைக் கேட்கிறவர்களின் மனதில் ஆழமான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. ஒவ்வொருவரும் தான் கடந்த வந்த பாதையில் எதிர்கொண்ட அனுபவங்களும் கேட்டு ரசித்த பாடல்களும் ஒரு புள்ளியில் ஒன்றிணைந்து நினைவில் எப்பொழுதும் பசுமையாக இருக்கின்றன. நாற்பதாண்டுகளுக்கு முன்னர் பதின்பருவத்தில் கேட்டு ரசித்த பாடல், எழுபது வயதிலும் மனசுக்குள் பூவாய் மலர்ந்திடுவது இயல்பாக நிகழ்கின்றது.

தமிழ்த் திரைப்படங்களுக்குப் பாடல்கள் புனைந்திட்ட பாபநாசம் சிவன், கா.மு.ஷெரீப், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், உடுமலை நாராயண கவி, மருதகாசி, மாயவநாதன் ஆலங்குடி சோமு, கண்ணதாசன், வாலி, முத்துலிங்கம், புலமைப்பித்தன் போன்ற கவிஞர்கள் தொடக்ககாலப் பாடலாசிரியர்களில் குறிப்பிடத்தக்க சிலர். எழுபதுகளில் கவிஞர்கள் கண்ணதாசனும் வாலியும் திரைப்படப்பாடல்கள் எழுதுவதில் ஜாம்பவான்களாக விளங்கினர். அந்த வரிசையில் போட்டிகள் நிரம்பிய

திரையுலகில் 27 வயதான கிராமத்து வாலிபரான வைரமுத்து பாடல்கள் எழுதிட முயன்றபோது சூழலின் வெக்கை, அவருக்கு நிச்சயம் புலப்பட்டிருக்கும். ஓயாத எதிர்ப்பு அலைகள் வலுவாக வீசிக்கொண்டிருந்த திரையுலகில் வைரமுத்து தன்னுடைய எழுத்தின் மீதான நம்பிக்கையுடன் பாடலை எழுதிட முயன்றார். 1980 ஆம் ஆண்டு 'பொன் மாலைப் பொழுது" என்று பாடல் எழுதி தமிழ்த் திரையுலகில் காலடியெடுத்து வைத்த வைரமுத்துவின் பாடல் புனைந்திடும் திறன் தொடக்கத்திலேயே தனித்து விளங்கியது. அவர் எழுதிய முதல் பாடலின் வரிகள், அதுவரை நிலவிய திரையிசைப் பாடல் வரிகளைக் கேள்விக்குள்ளாகின. வைரமுத்து என்றொரு ஆளுமை எப்படி உருவானது என்ற கேள்வி முக்கியமானது. வைரமுத்துவின் திரையுலக நுழைவுக்கு முந்தைய பத்தாண்டுகளில் தமிழ்த் திரைப்படங்களின் நிலையைக் கண்டறிந்திட வேண்டியுள்ளது. அப்பொழுதுதான் வைரமுத்து என்ற திரைப்பட ஆளுமையின் தனித்துவமும் சிறப்பும் புலனாகும்.

எழுபதுகள் காலகட்டத்தில் தமிழ்த் திரைப்படங்கள் மாறிவரும் புதிய சூழலுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் தத்தளித்தன. குறிப்பாகத் தமிழ்த் திரைப்படப்பாடல்கள் இளைய தலைமுறையினரை விட்டு விலகியிருந்தன. திரைப்படக் கதாநாயகர்களாக ஜொலித்த எம்.ஜி.ஆர்., சிவாஜி ஆகிய இருவரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த தமிழ்த் திரைப்பட உலகு, ஒருவகையில் முடங்கி இருந்தது என்பது தான் உண்மை. அறுபதுவயதான நடிகர்களின் கிழத் தோற்றமும், இளம் பெண்ணுடன் சேர்ந்து ஆடிய காதல் டூயட்களும் செயற்கையான கதையமைப்பும் இளம் ரசிகர்களுக்கு எரிச்சலை அளித்தன. அன்றைய கால கட்டத்தில் சகிக்க முடியாதவாறு வெளியான வறண்ட தமிழ்த் திரைப்படங்கள் பார்வையாளர்களால் புறக்கணிக்கப்பட்டன. தமிழ்சினிமாவின் அழிவையாராலும் தடுக்க முடியாது என்ற நிலை உருவாகிக்கொண்டிருந்தது. அப்பொழுது ஷோலே, யாதோங்கி பாரத், பாபி, குர்பானி, ஆராதனா, ஆகலே லக் ஜா போன்ற ஹிந்தித் திரைப்படங்களும் எண்டர் தி டிராகன் போன்ற ஆங்கிலத் திரைப்படங்களும் தமிழ்நாட்டுத் திரையரங்குகளில் நூறு நாட்களைக் கடந்து வெற்றிகரமாக ஓடின. பெரும்பாலான தமிழ்த் திரைப்படங்கள் நான்கு வாரங்கள்கூட திரையரங்குகளில் ஓடவில்லை. ஹிந்தித் திரைப் படங்களின் பாடல்கள் தமிழ்நாடெங்கும் ஒலித்தன. கல்லூரி மாணவர்கள் பிரபலமான ஹிந்திப் படங்களைப் பாடல்களுக்காக மீண்டும் மீண்டும் பார்த்தனர். கல்லூரி விடுதியில் தங்கியிருந்த மாணவர்கள் ஹிட்டார், புல் புல் தாரா போன்ற இசைக் கருவிகளில் "சுராலியே", "தம்மரே தம்" என்று ஹிந்திப் பாடல்களை வாசித்து மகிழ்ந்தனர். திருவிழாக்களில் நடத்தப்பட்ட இசைக் கச்சேரிகளில் ஹிந்திப் பாடல்கள் கணிசமான இடத்தைப் பிடித்தன. பாபி, ஷோலே, குர்பானி போன்ற ஹிந்தித் திரைப்படங்களின் பாடல்கள் பெரும்பாலான இசைக் கச்சேரிகளில் பாடப்பட்டபோது, இளைஞர்கள் உற்சாகத்துடன் கேட்டனர்; நடனமாடினர். ருப்புதேராமஸ்தானா, யாதோங்கி பாரத் போன்ற ஹிந்தித் திரையிசைப் பாடல் வரிகளை முணுமுணுக்கும் இளைஞர்களின் எண்ணிக்கைக் கணிசமாகப் பெருகியது. சுருங்கக்கூறின் அன்றையத் தமிழ்த்திரையிசைப் பாடல்கள் தட்டையாகவும் மொக்கையாகவும் இருந்தன. இசையமைப்பாளர் எம். எஸ். விஸ்வநாதன்களத்தில் இருந்தாலும், ஹிந்திப் பாடல்கள் பிரபலமடைவதைத் தடுக்கமுடியவில்லை. தமிழ்த் திரைப்படம் என்றால் போர், பாடல் என்றால் அறுவை என்ற நம்பிக்கை எங்கும் பரவலாக இருந்தன. தமிழ்த் திரைப்படம் தன்னிருப்பைத் தக்க வைத்துக்கொள்ளத் தடுமாறுகின்ற சூழல் வலுவாக நிலவியது.

காற்றுவெளியில் திடீரென ஒலித்த "மச்சானைப் பார்த்தீங்களா?" என்ற ஜானகியின் குரலினால் ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டு இளைஞர்களும் திரும்பிப் பார்த்தனர். அன்னக்கிளி, கவிக்குயில், 16 வயதினிலே, ஜானி, என இளையராஜா இசையமைத்த திரைப்படப் பாடல்கள், தமிழர்களின் ரசனையை மாற்றியமைத்தன. இளையராஜாவின் தனித்துவமான இசைப்பயணம், இளைஞர்களின் ஏக்கத்தையும் தேடுதலையும் புதிய மொழியில் சொன்னது. மேடைக்கச்சேரிகளில் தமிழுக்குக் கிடைத்த முக்கியத்துவம் ஒரு புறம் எனில் அதுவரை கொடிகட்டிப் பறந்த ஹிந்தித் திரையிசைப்பாடல்கள் காணாமல் போனது இன்னொரு புறம் நிகழ்ந்தது. நகரங்கள் தோறும் புதிதாக உருவான ஆர்க்கெஸ்டரா குழுக்கள் தமிழ் நாடெங்கும் இளையராஜா இசையமைத்த காதல், மெலோடி, சோகம், குத்துப்பாட்டு என இசையோடு பயணித்தனர். இசைக் கச்சேரிகளில் சில பாடகர்கள் உடலை அசைத்தவாறு பாடிய தோற்றம், பெரும் வரவேற்புப் பெற்றது. அழகான பெண்பாடகி திரையிசைப் பாடலைப் பாடும் போது, ரசிகர்கள் ஆர்வத்துடன் கேட்கவும் பார்க்கவும் செய்தனர். அந்தவகையில் இளையராஜா ஒப்பீடு அற்ற சாதனையாளர். வெறுமனே பேசிக்கொண்டிருந்த சினிமாவைக் கேமரா மொழிமூலம் காட்சிபடுத்திய பாரதிராஜா, மகேந்திரன் போன்ற இயக்குநர்களும் பாலு மகேந்திரா, நிவாஸ், அசோக் குமார் போன்ற ஒளிப்பதிவாளர்களும் புதிய தடத்தை வகுத்தனர். அன்றைய கால கட்டத்தில் கூட்டுக் குடும்ப அமைப்புச் சிதைவு, நகரமயமாதல், தொழில்மயமாதல், உயர் கல்விப் பரவல் காரணமாகச் சமூக விழுமியங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் திரைப்படங்களின் போக்கினை மாற்றியமைத்தன. உருக்கமான குடும்பப் பின்புலத்தில் சோகமான பாட்டு, தத்துவப் பாட்டு போன்றவற்றை ரசிக்கின்ற மனப்பான்மையில் மாற்றம் ஏற்பட்டது. இத்தகு சூழலில் தான் வைரமுத்து, பாடலாசிரியராகத் தமிழ்த் திரைப்பட உலகில் நுழைந்தார். இயக்குநர் பாரதிராஜா, இசையமைப்பாளர் இளையரஜா ஆகிய இருவரும் சேர்ந்து அறிமுகப்படுத்திய கவிஞர் வைரமுத்துவின் பாடல் எழுதும் பணி, நிழல்கள் (1980) திரைப்படத்தில் இருந்து தொடங்குகிறது. திரையுலகில் ஏற்கனவே இருந்த இசையமைப்பாளர்களிடம் இருந்து விலகி, மாறுபட்ட கோணத்தில் இசையமைத்த இளையராஜா புதிய மொழியில் பாடலை எழுதும் கவிஞரைத் தேடியபோது வைரமுத்துவின் கவித்துவமான மொழியினால் ஈர்க்கப்பட்டார் என்றுதான் சொல்ல வேண்டும். வைரமுத்துவின் பாடல் வரிகள் இளையராஜாவின் இசையுடன் இசைந்து பாடப்பட்டபோது கேட்கிறவர்களுக்குச் சிறகுகள் முளைத்தன. புதுமையான இசை, மாறுபட்ட பாடல் வரிகள் கேட்பவர் மனங்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தின. அன்றையக் காலகட்டத்தில் நிலவிய நெருக்கடிக்குள்ளான திரைப்படச் சூழல் தான் தேவையின் காரணமாக வைரமுத்து என்ற பாடலாசிரியரை உருவாக்கியது. அதேவேளையில் வைரமுத்து தனிமனிதராகத் திரையிசைப் பாடலாக்கத்தைக் காத்திரமாக மாற்றியமைத்ததும் நடைபெற்றது. வைரமுத்து எழுதியுள்ள பாடல் வரிகள் கடந்த 45 ஆண்டுகளாகத் தமிழர் வாழ்க்கையுடன் ஒன்றிணைந்துள்ளன. இதுவரை 7,500 க்கும் கூடுதலான திரைப்படப் பாடல்கள் எழுதியுள்ள வைரமுத்து ஏழு தடவைகள் பாடல்களுக்காகத் தேசிய விருதும் பெற்றுள்ளார்.

வைரமுத்து கவிஞராகத் திரைப்படப் பாடல் ஆக்கத்தில் செய்த சாதனைகள் எப்படி நிகழ்ந்தன? வைரமுத்துவின் கவித்துவம் தோய்ந்த சொற்கள் எங்கிருந்து உருவாகின? யோசிக்க வேண்டியுள்ளது. வைரமுத்து எழுதிய பாடல்களில் இடம் பெற்றுள்ள புதிய மொழியிலான கவித்துவப் பின்புலம் ஆய்விற்குரியது. எழுபதுகளில்

தமிழில் மரபுக் கவிதைகள் ஒருபுறம் எனில் இருண்மையான மொழி நடையில் 'எழுத்து' சிற்றிதழ் சார்ந்த புதுக்கவிதைகள் இன்னொருபுறம் வெளியாகின. அன்று நாடெங்கும் வீச்சாகப் பரவிய இடதுசாரிக் கருத்துக்களின் விளைவாகக் கோவையில் இருந்து பிரசுரமான 'வானம்பாடி' சிற்றிதழ், முற்போக்குக் கவிதைகளுக்கு முன்னுரிமை அளித்தது. நேரடியான இடதுசாரிக்கருத்துகளும் புரட்சிகரமான அறைகூவல்களும் மிக்க கவிதைகள் வானம்பாடி இதழில் பிரசுரமாகின. தமிழ்ப் புதுக்கவிதையை எளிமைப்படுத்தி மக்கள் மயமாக்கிய வானம்பாடி இதழ் காரணமாக வானம்பாடி மரபு என்ற புதிய கவிதைப் போக்குத் தமிழில் உருவானது. இந்தியாவில் சோசலிசப் புரட்சி நிகழவிருக்கிறது என்ற எண்ணம் பரவலான சூழலில் வடுகபட்டி என்ற கிராமத்தில் இருந்து தமிழிலக்கியக் கல்வி பயின்றிடச் சென்னைக்குச் சென்ற இளைஞரான வைரமுத்து சமுதாய மாற்றத்திற்கு ஆதரவான கருத்துகளால் ஈர்க்கப்பட்டார். திராவிட இயக்கம் தந்த பகுத்தறிவுப் பாசமும் சோசலிசக் காதலும் நெஞ்சில் நிறைந்து நின்றன. என்ற வைரமுத்துவின் கூற்று, கவனத்திற்குரியது. வைரமுத்து எழுதியுள்ள பாடல்களும் கவிதைகளும் புனைவுகளும் விளிம்புநிலையினர்க்குச் சார்பாக எழுதப்பட்டிருப்பதை அவதானிக்கும் போது அவருடைய அரசியலையும் சமூக அக்கறையையும் அறிந்திட முடியும். அன்று கலங்கலாகவும் மங்கலாகவும் எழுதப்பட்ட இருண்மைக் கவிதைகளுக்கு எதிராக எழுதப்பட்ட வானம்பாடிக் கவிதைகளில் இடம் பெற்றிருந்த "வசந்த மின்னல்கள்", "அமுத தாரை", "சிகரங்கள் பொடியாகும்", "புழுதிகளும் பிரளயங்களாகும்", "மகரந்த ஒப்பனை", "அக்கினி வயல்கள்" போன்ற சொற்கோலங்கள் தமிழ்க் கவிதையுலகில் புத்தொளியைப் பாய்ச்சின. இத்தகைய சூழலின் தாக்கம் வைரமுத்துவின் தொடக்க காலப் பாடல்களில் வெளிப்பட்டிருப்பது தற்செயலானது அல்ல. மரபும் புதுமையும் கலந்த மொழியில் தனக்கான கவிதை மொழியை உருவாக்கிய வைரமுத்துவின் இலக்கிய ஈடுபாடு வானம்பாடிக் கவிதை மரபின் தொடர்ச்சியாகும்.

"நிழல்கள்" திரைப்படத்திற்காக வைரமுத்து எழுதிய முதன்முதலாக எழுதிய பாடல் வரிகள்:

***ஆயிரம்நிறங்கள்ஜாலமிடும்***
***ராத்திரிவாசலில்கோலமிடும்***
***வானம்இரவுக்குப்பாலமிடும்***
***பாடும்பறவைகள்தாளமிடும்***
***பூமரங்கள்சாமரங்கள் வீசாதோ***

கவிஞர் வைரமுத்து புனைவு மொழியில் செதுக்கிய சொற்கள், மூலம் உருவான பாடல் வரிகள், ஏற்கனவே திரைப்பட பாடலாசிரியர்கள் எழுதிய பாடல்களில் இருந்து முற்றிலும் மாறுபட்டு விளங்கின. இளையராஜாவின் இசையில் தோய்ந்து வெளியான பாடல், வைரமுத்துவின் படைப்பூகத்தினை வெளிப்படுத்தியது. பாடலைக் கேட்கிறவர்களுக்குப் பாடும் பறவைகள், பூமரங்கள், பொன் மாலைப் பொழுது போன்ற சொற்கள் கிளர்ச்சியை ஏற்படுத்தின. வெறுமனே சொற்கள் என்று கடந்து சென்றுவிடாமல் சிலர் சொற்களுக்குள் பயணித்துப் போதைக்குள்ளாயினர். பின் நவீனத்துவம் குறிப்பிடுகின்ற பிரதி தரும் வாசிப்பு இன்பம் என்பது வைரமுத்துவின் பாடல் வரிகளைப் பொறுத்தவரையில் கேட்டல் இன்பமாக மாறியுள்ளது.

வைரமுத்து பல்லாண்டுகளாகத் தொடர்ந்து திரையிசைப் பாடல்களை எழுதுவதும் அவை பிரபலம் அடைந்திருப்பதும் நிச்சயமாகச் சாதனைதான். திரைப்பட உருவாக்கத்தில் யார் வேண்டுமானாலும் பாடல்கள் எழுதிடலாம் என்ற சூழலில் வைரமுத்துவின் உழைப்புதான் திரைத்துறையில் அவரை நிலைத்திருக்கச் செய்துள்ளது. பொதுவாகத் திரையிசைப் பாடலுக்கான வரிகளை

எழுதுவதில் பாடலாசிரியர் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. பாடலாசிரியர் திரைப்படத்திற்காகப் பாடல்கள் எழுதும் போது இயக்குநர், இசையமைப்பாளர் போன்றோரைத் திருப்திபடுத்தும் வகையில் வரிகளை எழுத வேண்டியது அடிப்படையானது. கவிஞர், புதிதாக எழுதுகிற பாடல், திரைப்படத்தின் காட்சிக்குப் பொருத்தமாக எழுத வேண்டிய நெருக்கடியில், அம்மியைக் கொத்திட சிற்பி தேவையா என்று தோன்றுகிறது. பாடலாசிரியர், தான் புனைந்திடும் பாடல் வரிகளையும் சொற்களையும் எப்படி வேண்டுமானாலும் மாற்றிட அனுமதிக்கிற மனநிலையுடையவராக இருத்தல் வேண்டும். எல்லாத் தடைகளையும் மீறிப் பாடலாசிரியர் தன்னுடைய கவித்துவத்தையும் படைப்பாக்கத்தினையும் பாடல் வரிகளில் பதிவாக்கிடப் பெரும் ஆற்றல் தேவைப்படுகிறது. கவிஞரின் கவித்துவம் பொங்கிடும் பாடல் வரிகள் என்றாலும் அவை பொதுவெளியில் பிரபலமடைந்தால்தான் அவருக்கு அடுத்தடுத்துப் பாடல்கள் எழுதிட வாய்ப்புக் கிடைக்கும். அண்மைக்காலத்தில் பெரிதும் முணுமுணுக்கப்படும் பாடலின் வரிகள், ஓரிரு வாரங்களில் மறக்கடிக்கப்படுகிற சூழலைக் கவனத்தில்கொள்ளாத பாடலாசிரியரின் இருப்பு, நிரந்தமற்றது தான். திரைப்படம் என்ற படைப்பு, பல்வேறு கலைஞர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள், இயக்குநர் போன்றோரின் கூட்டு முயற்சியில் உருவாகி அது திரையிடலில் வெற்றி பெற வேண்டிய நெருக்கடிக்குள் இருக்கிறது. இந்நிலையில் வைரமுத்து 7,500க்கும் கூடுதலான திரையிசைப் பாடல்களை எழுதியிருக்கிற செயல், அவரைச் சாதனையாளராக்கியுள்ளது.

1983ஆம் ஆண்டு சென்னையில் நாவலாசிரியர் வண்ணநிலவனைச் சந்தித்தபோது, அவர் திரைப்படப் பாடல் வரிகளைச் சிலாகித்துப் பேசினார். ‘தேவதாஸ்” திரைப்படத்தில் இடம் பெற்றுள்ள ‘எல்லாம் மாயை தானா” என்று தொடங்கிடும் பாடல் வரிகளான ‘என் ஏழ்மையினாலே பிரேமக்க பாடம் தானே மூடியதோ விதிதான் விளையாடியதோ” என்பதைச் சொல்லி உடுமலை நாராயண கவி எப்படி எழுதியிருக்கார் பார்த்தீங்களா? என்றார். ‘பிரேமக்கபாடம்” என்ற சொல்லாட்சியைப் புகழ்ந்தார். அவருடைய பேச்சுத்தான் திரைப்படப் பாடல் பற்றிய என் புரிதலை மாற்றியது. மேலும் அவர், நாடோடி மன்னன் திரைப்படத்திற்கு இசையமைத்த இசையமைப்பாளர் எம். எஸ். சுப்பையா நாயுடு அவர்களைச் சந்தித்தபோது திரையிசை, பாடல்கள் பற்றி நாயுடு சொன்னதை என்னிடம் சொன்னார்: எந்த உரைநடை என்றாலும் அதை இசையுடன் பாட முடியும். ஒவ்வொரு வாக்கியத்திற்குப் பின்னாலும் இசை இருக்கிறது. அப்புறம் நாயுடு அவர்கள் ஒரு வாக்கியத்தைச் சொல்லி இசையுடன் பாடிக் காட்டியதை வியப்புடன் வண்ணநிலவன் சொன்னார். திரையிசைப் பாடல் பற்றிய பிரமை நீங்கிய போது எனக்குள் மூடியிருந்த கபாடம் திறந்தது.

காத்திரமான இலக்கியப் படைப்புகளை வாசித்தாலும் விமர்சித்தாலும் இன்றுவரை எனக்குள் ஓய்வான பொழுதில் திரையிசைப் பாடல் வரிகள் மெல்ல ஒலித்துக் கொண்டிருக்கின்றன. இசையுடன் ஒலித்திடும் பாடல் வரிகள் தரும் மகிழ்வுக்கு இணை எதுவுமில்லை. துன்பம் நேர்க்கையிலும் சலிப்பான பொழுதுகளிலும் விருப்பமான திரையிசைப் பாடல்களைக் கேட்டால் மனம் சமநிலை அடையும் என்பது என்னுடைய அனுபவம். சரி, இருக்கட்டும்.

வைரமுத்து எழுதியுள்ள திரைப்படப் பாடல்களை ஆராய்ந்திடும்போது, அவருடைய பாடல் புனைந்திடும் படைப்புத்திறன் இளையராஜா, ஏ.ஆர்.ரகுமான் என்ற இரு இசையமைப்பாளர்களுடன் நெருக்கமாக

*இருப்பதை அறிந்திட முடியும். இளையராஜாவுடன் இணைந்து பாடல்களை வெற்றிகரமாகப் பாடல்களை எழுதிய வைரமுத்து, கருத்து வேறுபாடு காரணமாகப் பின்னர் பிரிய நேர்ந்தது. 1992ஆம் ஆண்டு இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் இசையமைப்பில் ரோஜா படத்திற்காகப் பாடல்கள் புனைந்தபோது வைரமுத்துவின் இரண்டாவது பயணம் தொடங்கியது. இளையராஜாவின் இசையமைப்புப் பாணியில் இருந்து விலகித் தனக்கெனப் புதிய இசைத்தடத்தை ரகுமான் வகுத்த போது, வைரமுத்துவின் பாடல்கள் அருமையாகப் பொருந்தின. ரகுமான் இசையில் வெளியான கிழக்குச் சீமையிலே, ஜென்டில்மேன், இந்தியன், திருடா திருடா, கருத்தம்மா போன்ற திரைப்படங்களுக்கு வைரமுத்து எழுதிய பாடல்கள் இளைஞர்களைக் கவர்ந்தன. ரகுமானுடன் சேர்ந்த பின்னர் இலக்கிய நயத்துடன் கவிதைபோல் பாடல்களை எழுதிய வைரமுத்து தனக்கான அடையாளத்துடன் பாடல்களைப் புனைந்து கொண்டிருக்கிறார். வைரமுத்து எழுதியுள்ள திரையிசைப் பாடல்கள் பற்றிப் பருந்துப் பார்வையில் என்னுடைய அபிப்ராயங்களைப் பதிவாக்கிட விழைந்துள்ளேன்.*

*நவீனப் பாணரான வைரமுத்து, சங்க மரபில் தோய்ந்து எழுதிய பாடல் வரிகள் முக்கியமானவை. அவை:*

***ஆண்: நறுமுகையேநறுமுகையே***
***நீயொருநாழிகைநில்லாய்***
***செங்கனிஊறியவாய்திறந்து***
***நீயொருதிருமொழிசொல்லாய்***
***பெண்: அற்றைத்திங்கள்அந்நிலவில்***
***கொற்றப்பொய்கைஆடுகையில்***
***ஒற்றைப்பார்வைபார்த்தவனும்நீயா***
****** *** ******
***பெண்: யாயும்யாயும்யாராகியாரோ***
***நெஞ்சில்நேர்ந்ததென்ன***
***ஆண்: யானும்நீயும்எவ்வழிஅறிதும்***
***உறவுசேர்ந்ததென்ன***
***பெண்: ஒரேஒருதீண்டல்செய்தாய்***
***உயிர்க்கொடிபூத்ததென்ன***
***ஆண்: செம்புலம்சேர்ந்தநீர்த்துளிபோல்***
***அன்புடைநெஞ்சம்கலந்ததென்ன***

*வைரமுத்து எழுதியுள்ள திரையிசைப் பாடல்வரிகளின்தனித்துவம்என்னவென்று கண்டறிந்திடும்போது அவருடைய பன்முக ஆற்றல்களை அறிந்திட முடியும். வைரமுத்துக்குள் இயற்கையாகப் பொதிந்துள்ள கவித்துவ ஆற்றல், மரபிலக்கியமான சங்கப் பாடல்களை உள்வாங்கிகொண்டு அருமையான வரிகளாக வெளிப்பட்டுள்ளது. அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில் என்று அங்கவையும் சங்கவையும் இணைந்து பாடிய புறத் திணைப் பாடலில் தொனிப்பது சோகத்தின் உச்சம். அந்தப் பாடல் வரிகள் தந்த உணர்ச்சிப் பெருக்கில் வைரமுத்துவின் மனம் தத்தளிக்கிறது. அவர், அற்றைத் திங்கள் என்ற சொல்லைக் காதல் உணர்வில் ததும்பிடக் கட்டமைத்திருப்பது அவருடைய மொழி ஆளுகைக்குச் சான்று.*

*வைரமுத்து யாயும் யாயும் யாரோகியாரோ, யானும் நீயும் எவ்வழி அறிதும், செம்புலம், அன்புடை நெஞ்சம் போன்ற சங்கப் பாடல் வரிகளைக் காதல் உணர்வில் மகிழ்ந்திருக்கிற காதலர்கள் பாடுகின்ற பாடலில் பொருத்தமாக இணைத்திருக்கிறார். இரண்டாயிரமாண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட சங்கப் பாடல் வரிகளை இளைய தலைமுறையினரிடம் அறிமுகப்படுத்துவதுடன் பண்டைத் தமிழரின் அக மரபினை மீட்டுருவாக்கிடும் வைரமுத்துவின் முயற்சி, கவனத்திற்குரியது. வைரமுத்துவின் மரபிலக்கியப் புலமை, நவீன மொழியில் அழுத்தமாக வெளிப்பட்டுள்ளது.*

*யதார்த்த வாழ்க்கையில் சாதி, மதம் பொருளாதாரம் ஏற்றத்தாழ்வு காரணமாகத் தமிழர் வாழ்க்கையில் அண்மைக்காலம் வரையிலும் காதல் என்ற சொல் பாவிக்கக்*

கூடாத சொல்லாக இருந்தது. ஆனால் தமிழ்த் திரைப்படங்கள் பெரிதும் காதலை மையமிட்டுத்தான் தயாரிக்கப்படுகின்றன. ஆண்-பெண் உறவில் காதலை முன்னிலைப்படுத்திடுகின்ற பெரும்பாலான தமிழ்த் திரைப்படங்களில் காதலைக் கொண்டாட்டமானதாகவும் கிளுகிளுப்பானதாகவும் மாற்றுதல் நடைபெறுகின்றது. அத்தகைய திரைப்படங்களில் இடம் பெறுகின்ற டூயட் பாடல் அல்லது பிரிவினால் வருந்திடும் காதலர் துயரப் பாடல் போன்றவற்றை வைரமுத்து இடைவிடாமல் எழுதிக் குவித்துள்ளார். காதல் என்ற ஒரே பொருண்மையை வைத்து எவ்வளவு பாடல்கள்தான் ஈரம் ததும்பிட எழுதிட முடியும்? என்றாலும் வைரமுத்து வெவ்வேறு விதமாக புனைந்திட்ட காதல் பாடல்கள் தனித்துள்ளன. இசையுடன் இசைந்திடும் காதல் பாடல் வரிகளை பல்வேறு தொனிகளில் எழுதிடும் ஆற்றல் வைரமுத்து விடம் இயற்கையாகவே இருக்கிறது. காதல் மனநிலையை முன்வைத்து எழுதப்பட்ட பாடல் வரிகள், பாடலைக் கேட்கிறவர்களைக் காதல் போதைக்குள் தள்ளுகின்றன வைரமுத்துவின் பாடல் வரிகள் யதார்த்தத்தில் காதலுடன் முரண்படுகின்ற பெரும்பான்மைத் தமிழர்களின் ஆழ்மனதில் பெருக்கெடுத் தோடுகின்ற காதல் நினைவுகளைக் கிளறிடவும் அமைதிப்படுத்திடவும் முயலுகின்றன. வைரமுத்து எழுதிய காதல் பாடல் வரிகளை இசையுடன் கேட்கும்போது ஏற்படுகின்ற உணர்வு, காதலர் ஒவ்வொருவருக்குள்ளும் ஆழமாக ஊடுருவுகின்றது. ஒருவகையில் பாடலுக்குள் இருந்து வெளியேறிய காதலர்களுடன் அசலான காதலர்கள் ஒத் திசைந்து வாழ்கின்ற விந்தை நிகழ்கின்றது. எனக்குத் தெரிந்த அளவில் காதலர் சிலருக்குக் காதல் உச்சாடனம்போல வைரமுத்து எழுதிய காதல் பாடல் வரிகள் விளங்குகின்றன. வைரமுத்து எழுதியுள்ள சில காதல் பாடல்களில் இருந்து எனக்குப் பிடித்த வரிகளைத் தொகுத்துத் தந்துள்ளேன். ஒவ்வொருவரும் அவரவருக்கான பாடல் வரிகளைக் கண்டறிந்திட முடியும்.

***அந்தி மழை பொழிகிறது***
***ஒவ்வொரு துளியிலும் உன் முகம் தெரிகிறது***

காதல் வயப்பட்ட இளைஞியும் இளைஞனும் சேர்ந்து பாடுகின்ற பாடலில் அந்தியில் பெய்கின்ற ஒவ்வொரு மழைத்துளியிலும் காதலியின் முகம் தெரிகின்றது என்று புனைவின் உச்சமாகக் காதலன் பாடுகின்றான். காதலில் திளைத்திடும் உள்ளங்களுக்குக் காணுமிடம் எல்லாம் இணையரின் முகம் தோன்றும். ஒருபோதும் வற்றாமல் பெருக்கெடுத்தோடும் காதல் ஆற்றில் நீந்துகிறவரின் மனதில் தோன்றுகின்ற கேள்வியை வைரமுத்து இலக்கிய நயத்துடன் பாடலாக்கியுள்ளார்.

***கண்ணுக்குள் முள்ளை வைத்து யார் தைத்தது***
***தண்ணீரில் நிற்கும்போதே வேர்க்கின்றது***

காதலர்களின் கண்களைப் பற்றிப் பழந்தமிழ் இலக்கியப் படைப்புகள் பதிவாக்கியுள்ளவற்றில் இருந்து வைரமுத்துவின் 'கண்'' மாறுபட்டுள்ளது. கண்ணோடு கண் நோக்கும் போது காதலர் இருவரிடமும் தோன்றுகின்ற உணர்வுகளைக் கண் பார்வையின் கூரிய நோக்குமூலம் மனதில் தைப்பதால், கண்ணுக்குள் முள் என்ற புனைவு, காதலைக் கொண்டாட்டமாக்கியுள்ளது.

***யாருக்கு யார் உறவு***
***யார் அறிவாரோ***
***என் பெயரில் உன் பெயரை***
***இயற்கையும் எழுதியதோ***

அகக்கவிதை மரபில் யாராகியரோ என்று காதலின் சிலிர்ப்பைச் சொல்லிட முயன்றுள்ள வரிகள், இயற்கையைத் துணைக்கு அழைத்துள்ளன. 'ஒன்றி உயர்ந்த பாலதாணையின் ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப'' என்று காதல் தோற்றப் பின்புலம் குறித்துத் தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியலில் இடம் பெற்றுள்ள நூற் பா என் நினைவுக்கு வருகிறது. காதலர் இருவரும்

ஊழினால் சந்தித்துக் காதல் வயப்பட்டனர் என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். பகுத்தறிவுச் சிந்தனையாளரான வைரமுத்து காதலுக்குக் காரணமாக இயற்கையை முன்னிறுத்தியுள்ளார்.

எவ்விதமான இலக்கண வரையறைக்கும் கட்டுப்படாத காதலில் மூழ்கிய காதலன்

**சிறகைத் தானடி யாசித்தேன்**
**சிறையை எனக்கு நீ தந்தாய்**

என்று தன்னிருப்பைப் பதிவாக்கிட முயலுகிறான். காதல் சிறகு X காதல் சிறை மூலம் வைரமுத்து காதலின் மறுபக்கத்தைக் காட்டியுள்ளார்.

குறுந்தொகை நூலில் இடம் பெற்றுள்ள சங்கப் புலவர் இறையனார் பாடல், காதலியின் அழகைப் பாராட்டுகிறது.

**செறிஎயிற்றுஅரிவைக்கூந்தலின்**
**நறியவும்உளவோநீஅறியும்பூவே.**

அஞ்சிறைத் தும்பியிடம் கேள்வியாகக் கேட்ட புலவரின் தேடல், பின்னர் தொன்மக் கதையானது. பெண்ணின் கூந்தலுக்கு வாசமுண்டா என்ற ஆய்வில் ஈடுபட்ட பாண்டிய மன்னன், நக்கீரர், சிவன் ஆகிய மூவரும் தேடிக் கண்டடைந்த மெய்மை யாது? என்ற கேள்விக்கு நவீன அறிவியல் மயிர்க்காலுக்கு வாசமுண்டு என்று துல்லியமாகப் பதிலளித்துள்ளது. வைரமுத்துவின் கவிதை மனம் பெண்ணுக்கு வாசமுண்டா என்ற தேடலில் ஈடுபடாமல் சேலை கட்டும் பெண் என்று குறிப்பிடுவதில் ஏதும் சூட்சுமம் இருக்கிறதா என்று கண்டறிந்திட வேண்டியுள்ளது.

**சேலை கட்டும் பெண்ணுக்கொரு**
**வாசமுண்டு- கண்டதுண்டா**
**கண்டவர்கள் சொன்னதுண்டா**

வைரமுத்துவின் பழந்தமிழ் இலக்கிய ஈடுபாடும் ஆர்வமும் வணிக நோக்கிலான திரைப்படப் பாடல் புனைவிலும் மரபின் தொடர்ச்சியைப் பதிவாக்கியுள்ளன.

பெண் மனதின் தேடலைச் சொல்லிடும் பின்வரும் பாடலை இசையுடன் கேட்கும்போது துள்ளாத மனமும் துள்ளும். சமூகரீதியாகப் பால் அடிப்படையில் இரண்டாம் நிலையில் ஒடுக்கப்படும் பெண்ணின் கனவுகளையும் ஏக்கத்தையும் சொல்கின்ற பாடல் காலங் கடந்து நிலைத் திருக்கும்.

**மார்கழிப் பூவே மார்கழிப் பூவே**
**உன் மடிமேல் ஓரிடம் வேண்டும்**
**மெத்தை மேல் கண்கள் மூடவும் இல்லை**
**உன் மடி சேர்ந்தால் கனவுகள் கொள்ளை**

திரைப்படப் பாடல் என்பது மெட்டுக்கான பாட்டு என்றாலும் வைரமுத்து தான் எழுதியுள்ள பாடல்களில் தன்னுடைய கவித்துவ அடையாளத்தைக் கருத்தியலுடன் எளிய மொழியில் பதித்துள்ளார்.

**இலைகளின் பனித்துளி**
**உருண்டு விழும்**
**இலைகளும் பழுத்தபின்**
**உதிர்ந்துவிடும்**

மிகவும் மெனக்கெடாமல் ஜென் கவிதை போலச் சொல்லியுள்ள முறையினால் பாடல் எளிமையாகக் கேட்பவரின் மனதில் பதிந்திடும்.

அன்றாட வாழ்க்கை பற்றிய வைரமுத்து வின் மதிப்பீடுகள் அழுத்தமானவை.

**கனவு என்பது கண்களின் உரிமை**
**கனவு கலைப்பது காலத்தின் உரிமை**
**சிதைந்த கனவைச் சேர்த்துச் சேர்த்து**
**அரண்மனை கட்டுதல் அவரவர் திறமை**

நம்பிக்கைதான் வாழ்க்கை என்ற முறையில் எழுதப்பட்டுள்ள பாடல் எங்கும் அவநம்பிக்கை பரவிடும் இன்றையச் சூழலுக்குத் தேவையானதாகும்.

ஈழப் போராட்டத்தின்போது இருப்பதா? இறப்பதா? என்ற துயரமான காலகட்டத்தில் வைரமுத்து அஃறிணை உயிர்களை முன்வைத்துப் புனைந்திட்ட வரிகள், வாழ்வின் பேரவலத்தைச் சொல்கின்றன. சக மனிதரிடம்கூட பிரிவு சொல்ல முடியாத சூழலில் யாரை எப்பொழுது சாவு தழுவும் என்று அறிந்திடாத வாழ்க்கை வாழ நேர்ந்திட்ட

கவிதைசொல்லி, சடப் பொருட்கள், அஃறிணை உயிரிடமிருந்து விடைபெறுகின்றான்.

**பறவைகாள்**
**இருந்தால் சந்திப்போம்**
**வனமே மலைகளே**
**வாழ்ந்தால் சந்திப்போம்**

வைரமுத்து நேரிடையாக வன்முறையைச் சித்திரிக்காத போதிலும் பாடல் வரிகள் வாசிப்பில் துயரமளிக்கின்றன.

வைரமுத்து சோசலிசக் கனவுடன் இருந்தாலும் குறைந்த எண்ணிக்கையில் இடதுசாரிக் கருத்தியல் போக்கினுக்குச் சார்பான பாடல்களை எழுதியுள்ளார்.

**எரிமலை எப்படிப் பொறுக்கும்-நம்**
**நெருப்புக்கு இன்னுமா உறக்கம்?**
**சிங்கக் கூட்டம் நிமிர்ந்தால்- துன்பச்**
**சிறையின் கதவு தெறிக்கும்**

முழுக்க வணிக நோக்கத்துடன் தயாரிக்கப்படுகின்ற திரைப்படங்களில் பாடலாசிரியராக எந்த அளவு சிறப்பாக எழுத முடியுமோ அந்த வரையறைக்குள் எரிமலை எப்படிப் பொறுக்கும் குமுறுகின்ற வைரமுத்துவின் பாடல், உழைக்கும் வர்க்கத்தின் குரலை ஓங்கி ஒலிக்கிறது.

ஒருவிதமான ஃபார்முலாவில் அமைந்த வெகுஜனப் படங்களையே உற்பத்தி பண்ணுகிற தமிழ் சினிமா ஃபாக்டரியில் மக்கள் பிரச்சினைக்கு முக்கியத்துவம் தந்திட்ட திரைப்படங்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. ஒரேமாதிரியான மசாலாத் திரைப்படங்களைத் தயாரித்துவிட்டு, அதற்கென்று சந்தையை உருவாக்கி, மக்களின் ரசனை இப்படியாகத்தான் இருக்கிறது என்று முந்தைய படங்களை நகலெடுக்கிற முயற்சியில் தமிழ்த் திரைப்படத் துறை சிக்கியுள்ளது. எத்தகைய இலக்கிய மேதையாக இருந்தாலும் திரையுலகு தனக்கேற்ற வகையில் மாற்றியமைத்திடும் வல்லமையுடையது. கவிஞர் வைரமுத்து விதிவிலக்காக இருந்திட வாய்ப்புள்ளதா? திரையுலகில் கவிஞராகச் சுயமரியாதையுடன் செயல்பட்டபோது அவர் எதிர்கொண்ட அனுபவங்கள், அவருடைய படைப்பாக்கத்தின்மறுபக்கமாகவிளங்குகின்றன. கடந்த 45 ஆண்டுகளில் கவிஞராக வைரமுத்து எழுதியுள்ள திரையிசைப் பாடல்களை மறுவாசிப்பிற்குள்ளாக்கிய போது அவர் தமிழரின் அன்றாட வாழ்க்கையில் பாடல்கள் மூலம் அழுத்தமான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதை அறிய முடிகிறது. அவர் எழுதியுள்ள திரையிசைப் பாடல்கள், அவருடைய மொழி ஆளுகைக்கும் பன்முகத் தேடலுக்கும் புலமை வீர்யத்திற்கும் சான்றாக வெளிப்பட்டுள்ளன.

**சான்றாதாரம்**

1. வைரமுத்து. ஆயிரம் பாடல்கள். சென்னை: சூர்யா லிட்ரேச்சர், 2018 (ஐந்தாம் பதிப்பு).